**<u>IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT CHENGALPATTU</u>**

# MCOP No. 47/2023

Dated :15.11.2024

ம,சா.1 திரு .கிஷோர் த-பெ.

**ம.சா.1 ஏற்கனவே பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்து 1 முதல் 9 வரையான சான்றாவணங்கள் தாக்கல் செய்ததன் பேரில் இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் விபத்தின் போது இடது ஓரமாக தான் வண்டியை ஓட்டிசென்றேன் என்றால் சரிதான். என் பிரமாண பத்திரிக்கையில் இடது ஓரமாக தான் வண்டியை ஓட்டி சென்றதாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மனுவிலும், வண்டியை இடது ஓரமாக ஓட்டி சென்றதாக நான் ஏதும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் யூ டேன் திரும்பும் இடம் என்றால் சரிதான். விபத்து என் அசட்டையினாலும், அஜாக்கிரதையாலும், அதிவேகத்தினாலும் தான் நடந்தது என்பதால் எதிர்மனுதாரர் எந்த விபத்திலும் இதற்கு பொறுப்பாகமாட்டார் என்றால் சரியல்ல. அவர் தான் இடித்துவிட்டு போய்விட்டார். எனது கவனக்குறைவால் விபத்து நடந்ததால் எதிர்மனுதாரர் எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு நட்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. மருத்துவரை இந்த வழக்கில் என் தரப்புச்சாட்சியாக விசாரித்தால் மட்டுமே எனக்கு ஏற்ப்பட்ட காயங்கள் குறித்து தெரியும் என்றால் சரிதான்.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 15.11.2024 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

**Witness Sd/-XXXX** **Sd/-Tmt.T.JayashreeM.L.,**

**தலைமை குற்றவியல் நடுவர்.**

**செங்கல்பட்டு.**